**சுருக்கம்**

தமிழ்நாடு பள்ளிக் கல்விப் பணி – தமிழ்நாடு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களின் மாவட்டக் கல்வி அலுவலர் பதவி உயர்வு தொடர்பான முரண்பாடுகள் மற்றும் குறைகளை ஆராய குழு அமைத்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக் கல்வி (ஏ1) துறை**

**அரசாணை (1டி) எண். 57** **நாள் 05 .03.2013.**
**திருவள்ளுவர் ஆண்டு 2044**
**நந்தன, மாசி 21**

படிக்கப்பட்டது :–

பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.198/ஏ1/இ1/2012, நாள் 02.04.2012, 22.05.2012 மற்றும் 23.05.2012.

* * * * *

**ஆணை :**

தமிழ்நாடு மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களின் மாவட்டக் கல்வி அலுவலர் பதவி உயர்வு தொடர்பான முரண்பாடுகளை களைந்திட ஒரு சீராய்வு குழு அமைத்திட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடத்திய பள்ளிக் கல்வித்துறை சார்ந்த ஆய்வுக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

2. பள்ளிக் கல்வி இயக்குநர் மேலே படிக்கப்பட்ட கடிதங்களில், தமிழ்நாடு மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் கழகம் மாவட்டக் கல்வி அலுவலர் பதவி உயர்வு சார்பாக அளித்த பல்வேறு கோரிக்கைகள் குறித்து ஆராய்ந்து அரசுக்கு பரிந்துரை செய்ய குழு ஒன்றை அமைக்கவும், அக்குழு மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்தும் அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

3. பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துருவை அரசு நன்கு ஆய்வு செய்து, தமிழ்நாடு மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களின் மாவட்டக் கல்வி அலுவலர் பதவி உயர்வு தொடர்பான முரண்பாடுகளை களைந்திட உரிய பரிந்துரைகளை அரசுக்கு அளித்திட ஓய்வுபெற்ற / தற்போது பணியில் உள்ள அலுவலர்களைக் கொண்டு பின்வரும் குழுவை அமைத்து அரசு ஆணையிடுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | திரு. ஆர். கருணாகரன், இயக்குநர் (ஓய்வு) பள்ளி சாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி இயக்ககம், சென்னை – 6. |
| 2. | உறுப்பினர் / செயலர் | இணை இயக்குநர் (மேல்நிலைக் கல்வி) பள்ளிக் கல்வி இயக்ககம், சென்னை.6. |
| 3. | உறுப்பினர்கள் | 1. திரு. வி. சந்திரசேகரன், கூடுதல் செயலர் (ஓய்வு), பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, சென்னை – 9 |

| | | |
|---|---|---|
| | | 2. திரு. முத்துக்கிருஷ்ணன், முதன்மைக் கல்வி அலுவலர் (ஓய்வு)<br>3. திரு. கிருஷ்ணன், சார்பு செயலாளர் (ஓய்வு), பணியாளர் (மற்றும்) நிர்வாக சீர்திருத்தத் துறை<br>4. திரு. டி.தேவராஜன், நேர்முக உதவியாளர் (ஓய்வு), மாவட்டக் கல்வி அலுவலகம், பட்டுக்கோட்டை |

4. குழு ஆற்றவேண்டிய பணிகள்: –

(1) மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் / உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் ஆகியோருக்கு மாவட்டக் கல்வி அலுவலர் பதவி உயர்வு வழங்குவதில் ஏற்படும் முரண்பாடுகளை களைதல் குறித்து ஆராய்ந்து பரிந்துரை செய்தல்.

(2) மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் பதவியும், மாவட்டக் கல்வி அலுவலர் பதவியும் ஒத்த ஊதிய விகிதத்தில் இருப்பதால், அப்பணியினை கருத்தில் கொண்டு முதன்மைக் கல்வி அலுவலர் பதவி உயர்வு அளிப்பது குறித்து பரிந்துரை செய்தல்.

5. மேலே பத்தி 3–இல் அமைக்கப்பட்டுள்ள குழுவின் உறுப்பினர்கள் அமர்வுப்படி, பயணப்படி ஆகியவைற்றை விதிகளின்படி பெற தகுதியுடையவராவார்கள்.

6. மேற்குறிப்பிட்ட குழுவின் செயல்பாடுகள் தொடர்பான செலவினங்கள் அனைத்தும் பள்ளிக் கல்வி இயக்ககத்தால் மேற்கொள்ளப்படும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

த. சபிதா,
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை – 6.
அனைத்து குழு உறுப்பினர்கள்,
(பள்ளிக் கல்வி இயக்குநர் வழியாக)
பள்ளிக் கல்வித் துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை – 9.
பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலாளர், சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.